# செய்தி வெளியீடு

**இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்: 2020 இரண்டாம் காலாண்டு**


**தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி அமைச்சு**

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-011-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk


இலங்கையின், 2020 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான (ஏப்ரல் 1 முதல் ஜூன் 30 வரை) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

இந்த காலாண்டில், மிகக் குறைந்த பொருளாதாரத் துறைகளைத் தவிர, இலங்கைப் பொருளாதாரம் கோவிட்-19 தொற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆகையால், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கணிப்பு செயல்பாட்டில் இந்த தாக்கத்தை அளவிடுவதற்கு முன், இந்த தொற்றுநோயின் போது பொருளாதாரத்தின் ஒவ்வொரு பொருளாதாரத் துறைகளின் நடத்தையையும் கவனமாக அவதானிக்க வேண்டியிருந்தது. அதன்படி, தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் இந்த சிக்கலை தீர்க்க உடனடியாக தேவையான முயற்சிகளை எடுத்தது.

- நாட்டின் பொருளாதாரத்தில் கோவிட்-19 இன் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் மிக விரைவான கணக்கெடுப்பைத் திட்டமிட்டது. இந்த நிறுவனத் துறை அளவிலான கணக்கெடுப்பு ஜூன் மாத நடுப்பகுதியில் இருந்து இருந்து 2020 ஜூலை இறுதி வரை நடத்தப்பட்டது, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஜனவரி முதல் மே வரையிலான காலங்களில் பொருளாதார செயல்திறன் குறித்த தகவல்களை வணிக நிறுவனங்களிலிருந்து சேகரித்தது. நாட்டின் கைத்தொழில் மற்றும் சேவைகள் துறையில் கிட்டத்தட்ட 18,000 நிறுவனங்களை உள்ளடக்கிய பெரிய, நடுத்தர, சிறு மற்றும் நுண்ணிய அளவிலான வணிகங்களை இம்மாதிரி கொண்டிருந்தது.

- மேலும், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன், கோவிட் -19 தொடர்பான பொது சுகாதார சேவைகளுக்காக சிகிச்சையளிப்பதற்காக அமைச்சினால் சிறப்பாக செய்யப்பட்ட செலவுகள் (தனிமைப்படுத்தப்பட்ட மைய சேவைகள், கூடுதல் வேலை நேரம் பற்றிய தரவு, இரண்டாவது காலாண்டில் தொடர்புடைய நிலுவையில் உள்ள ரசீதுகள் ) குறித்த தகவல்களை தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் பெற்று தேசிய கணக்குகளில் உள்ளடக்கியது.

- மேலும், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தேசிய கணக்குகள் பிரிவு ஊழியர்கள், இலங்கை கொழும்பு பங்குச் சந்தையில் பதிவுசெய்யப்பட்ட பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் வருடாந்த மற்றும் காலாண்டு நிதிநிலை அறிக்கைகளைப் பயன்படுத்தி விடுதிகள் மற்றும் உணவகங்கள் தொழில், தனியார் மருத்துவமனைகள், உண்மைச் சொத்துக்கள் நிறுவனங்கள் மற்றும் சில்லறை வர்த்தக பிரிவு போன்ற பல துறைகளுக்கு, குறிப்பாக இரண்டாம் காலாண்டு நிதிநிலை அறிக்கைகளை ஆராய்ந்ததன் மூலம் சிறப்பு ஆய்வை மேற்கொண்டனர். அப்போது வணிகங்களின் வீழ்ச்சியை அவர்கள் தெளிவாகக் கவனித்தனர்.

- தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தேசிய கணக்குகள் பிரிவு ஊழியர்கள் பிற தனிப்பட்ட சேவைகள், தொழில்முறை சேவைகள் மற்றும் உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள் போன்ற சேவைத் துறை வணிகங்களில் நாட்டில் கோவிட்-19 இன் தாக்கத்தை மதிப்பிடுவதற்காக தொலைபேசி கணக்கெடுப்பின் மூலம் மற்றொரு சிறப்பு ஆய்வை மேற்கொண்டனர்,

- தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தேசிய கணக்குகள் பிரிவு ஊழியர்கள், நாடு முடக்கத்தில் உட்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடமாடும் வர்த்தகம் குறித்து மாவட்ட செயலக பிரிவு மட்டத்தில் தகவல்களை சேகரித்தனர். இது முழு நாட்டிலும் முடக்கத்தில் உட்பட்ட காலத்தில் சில்லறை வர்த்தக நடவடிக்கை மற்றும் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கைகள் எவ்வாறு நடைபெற்றது என்பதையும் பிரதிபலித்தது.

மேலேயுள்ள முன்முயற்சிகளின் முடிவுகளை, குறிப்பாக கோவிட்-19 பொருளாதார தாக்க ஆய்வின் முடிவுகள் மற்றும் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட பிற சிறப்பு ஆய்வுகளின் முடிவுகள், இரண்டாம் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகளை மிகவும் துல்லியமாக கணிக்க தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் பயன்படுத்த முடிந்தது.

இரண்டாவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடு, நிலையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 16.3 சதவீத வீழ்ச்சியைக் காட்டியுள்ளது, இது 2019 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் பதிவான வளர்ச்சி வீதத்தின் 1.1 சதவீதத்துடன் ஒப்பிடும்போது, இலங்கை வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு மிகப் பெரிய வீழ்ச்சியாகும். இந்த காலாண்டில், உலகெங்கிலும் உள்ள பெரும்பான்மையான பொருளாதாரங்கள் (எ.கா.: இந்தியா, மாலைதீவு, தாய்லாந்து, சிங்கப்பூர், மலேசியா போன்றவை), மிகக் குறைவானவைகளைத் தவிர (எ.கா.: சீனா, வியட்நாம்), தங்கள் பொருளாதாரங்களில் கடுமையான சுருக்கத்தை பதிவு செய்துள்ளன. 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டைக் கருத்தில் கொள்ளும்போது, மார்ச் 19 முதல் ஏப்ரல் 20 வரை முழு நாடும் பூட்டப்பட்டிருந்தது. பின்னர் படிப்படியாக விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவில் இருந்து மாவட்டங்கள் விடுவிக்கப்பட்டன. இருப்பினும், மே 26 ஆம் தேதி வரை, முக்கிய தொழில்துறை மண்டலங்கள் மற்றும் வணிக இடங்கள் அமைந்துள்ள இரண்டு முக்கிய மாவட்டங்கள் (கொழும்பு மற்றும் கம்பஹா) விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவின் கீழ் இருந்தன. சமூகத்தில் கோவிட்-19 நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் இந்த ஊரடங்கு உத்தரவை விதித்ததுடன், அதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் வெற்றிகரமான முடிவுகளை அடைந்தது.

இருப்பினும், நாடு முடக்கத்தில் உட்பட்ட காலத்தில் நாட்டின் அதிகமான பொருளாதார துறைகளும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது, குறிப்பாக, உற்பத்தி, கட்டுமானம்,

பயணிகள் போக்குவரத்து (தரை மற்றும் வான்), சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், சுற்றுலா, பிற தனிப்பட்ட சேவைகள், தொழில்சார் சேவைகள், சில்லறை வர்த்தகம் மற்றும் கடல் மீன்பிடித்தல் போன்ற விவசாயத்தின் சில நடவடிக்கைகள் ஆகிய பொருளாதார நடவடிக்கைகளில் மறையான வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளது.

2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிற்கான தேசிய கணக்கு மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2019 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 1.1 சதவீதத்துடன் நேரான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 16.3 சதவீத மறையான வளர்ச்சியென மதிப்பிடப்பட்டுள்ளது என்று தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது. 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் நிலையான விலையில் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 1,936,273 மில்லியன்களாக குறைந்து பதிவு செய்ததுடன், 2019 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் ரூபா 2,312,078 மில்லியன்களாகவும் பதிவு செய்துள்ளது. மேலும், 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் நடப்பு விலையில் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூபா 3,012,013 மில்லியன்களாக குறைந்து பதிவு செய்ததுடன், 2019 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் ரூபா 3,589,246 மில்லியன்களாகவும் பதிவு செய்துள்ளது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பில் நடப்பு விலை 16.1 சதவீத மறை மாற்றத்தை பதிவு செய்துள்ளது.

பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள், நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு இக் காலாண்டில் தமது பங்களிப்பினை முறையே 9.7 சதவீதம், 24.8 சதவீதம், 61.2 சதவீதம் மற்றும் 4.3 சதவீதம் பங்களிப்பு செய்துள்ளன. கோவிட் - 19 தாக்கத்தின் விளைவாக, பொருளாதாரத்தில் பல துறைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன, மேலும் இது நாட்டின் பொருளாதார செயல்திறனை குறைக்க வழிவகுத்தது. இதனால், 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகள், விவசாயம், கைத்தொழில், சேவைகளின் மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளிலும் முறையே 5.9 சதவீதம், 23.1 சதவீதம் மற்றும் 12.9 சதவீதம் சுருங்கியுள்ளன. மேலும், 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், 'உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் ' 2019 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டோடு ஒப்பிடும்போது 30.1 சதவீதம் குறைந்துள்ளது. இதற்குக் காரணம் வரி வீதங்கள் மற்றும் தொடக்க எல்லைகளில் செய்யப்பட்ட திருத்தங்களால் வரி வருவாயில் பெரும் சரிவு ஏற்பட்டதாகும். இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியை பாதித்துள்ளது.

## விவசாயத் துறை

2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், விவசாய நடவடிக்கைகளில் முக்கியமாக 'கடல் மீன்பிடித்தல்' (39.1 சதவீதம்), 'எண்ணைப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி தேங்காய் உள்ளடங்கலாக'(14.2 சதவீதம்), 'தேயிலை வளர்ச்சி' (10.5 சதவீதம்), 'இறப்பர் வளர்ச்சி '(11.5 சதவீதம்), 'வனவியல் மற்றும் மரம் வெட்டல் '(27.3 சதவீதம்) மற்றும் 'விலங்கு உற்பத்தி '(1.6 சதவீதம்) ஆகியன முந்தைய ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும்போது சுருக்கத்தைக் காட்டுகின்றன. ஆயினும்கூட, 'தானியங்கள் வளர்ச்சி' (124.7 சதவீதம்), 'நெல் வளர்ச்சி' (17.2 சதவீதம்), 'காய்கறிகளின் வளர்ச்சி' (12.9 சதவீதம்), 'பழங்கள் வளர்ச்சி' (6.3 சதவீதம்), 'வாசனைத் திரவியங்கள் வளர்ச்சி' (4.7 சதவீதம்) மற்றும் 'நன்னீர் மீன்பிடித்தல்' (11.0 சதவீதம்) என்பன 2020 ஆம் ஆண்டின் இந்த காலாண்டில் மேலும் விரிவாக்கப்பட் டிருக்கின்றன.

## கைத்தொழில் துறை

2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், கோவிட் - 19 தொற்றுநோய் காரணமாக ஒட்டுமொத்த கைத்தொழில்துறை நடவடிக்கைகள் தொடர்ந்து 23.1 சதவீதம் வெகுவாகக் குறைந்து, தொற்றுநோயின் மோசமான பாதிப்பைக் காட்டுகின்றன. 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்ணின் வீழ்ச்சியைத் தொடர்ந்து, இலங்கையின் ஒட்டுமொத்த உற்பத்தித் தொழில் 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 20.6 சதவீதம் மறையான வளர்ச்சியை எதிர்கொண்டது. பல மாவட்டங்களில் ஏப்ரல் மாதம் முதல் மே மாத நடுப்பகுதி வரை ஊரடங்கு உத்தரவு விதித்ததன் விளைவாக உற்பத்தி நிறுத்தப்பட்டதே இதற்குக் காரணமாகும். முக்கியமாக 'புடவை உற்பத்தி, அணியும் ஆடைகள் மற்றும் தோல் தொடர்பான தயாரிப்பு' நடவடிக்கையால் இயக்கப்படுகிற உற்பத்தி நடவடிக்கை இந்த காலாண்டில் 44.2 சதவீத மறை வளர்ச்சியை பதிவு செய்து, உற்பத்தி நடவடிக்கையில் சுருக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 'இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி ' (42.0 சதவீதம்), 'தளபாட உற்பத்தி' (35.2 சதவீதம்), 'கற்கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்களின் உற்பத்தி' (25.4 சதவீதம்), 'ஏனைய உலோகமற்ற கனிப் பொருட்களின் உற்பத்தி' (20.9 சதவீதம்), 'ஏனைய உற்பத்திகள்' (20.6 சதவீதம்) மற்றும் 'இரசாயனப் பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்து பொருட்களின் உற்பத்தி' (12.7 சதவீதம்) ஆகியவை மறை வளர்ச்சி வீதங்களை ஏற்படுத்தியுள்ளன. இதற்கிடையில், நாட்டின் கைத்தொழில் துறையில் அதிக பங்கு வகிக்கும் 'உணவு, பானம் மற்றும் புகையிலை பொருட்களின் உற்பத்தி' நடவடிக்கை 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 0.2 சதவீத சிறிய மறை வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

கைத்தொழில்துறை நடவடிக்கைகளின் மத்தியில், இத் துறையில் 6.8 சதவீத பங்குகளை கொண்டிருக்கும் 'கட்டுமான' நடவடிக்கை, இந்த காலாண்டில் கணிசமான சுருக்கத்தை 30.1 சதவீதம் பதிவு செய்துள்ளது, அந்த நடவடிக்கை கோவிட் - 19 தொற்றுநோயினால் பெரும் மறையான தாக்கத்தைக் காட்டுகிறது. கட்டுமான நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து, 'சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்' நடவடிக்கையும் 2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 28.4 சதவீத மறை வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. மேலும், 'மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்' 10.3 சதவீத சுருக்கத்தை பதிவு செய்துள்ளது, கைத்தொழிற்துறையினுள் மின்சாரத்திற்கான தேவை குறைந்ததே இதற்கு காரணமாகும். இதற்கிடையில், 'நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' (3.7 சதவீதம்) மற்றும் 'சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' (3.3 சதவீதம்) நடவடிக்கைகள் இந்த காலாண்டில் சாதகமான வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன.

## சேவைத் துறை

2020 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில், சேவைகளின் செயல்திறன் 12.9 சதவீதம் கணிசமான குறைபாட்டை, பல சேவைத் துறை நடவடிக்கைகளில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக பதிவு செய்துள்ளது. குறிப்பாக 'தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் சேவை செயல்பாடு' (63.5 சதவீதம்), 'பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் உள்ளடங்க' (36.1 சதவீதம்), 'பிற தனிப்பட்ட சேவைகள்' (31.5 சதவீதம்), 'உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள்' (16.9 சதவீதம்) , 'தொழில்சார் சேவைகள்' (14.5 சதவீதம்) மற்றும் 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்' (1.5 சதவீதம்) ஆகியவை அவற்றின் செயல்பாடுகளில் சரிவைக் காட்டியுள்ளன. இருப்பினும், இந்த தொற்றுநோய்க்கு

மத்தியில், ‘தொலைத்தொடர்பு’ (19.6 சதவீதம்), ‘தகவல் மற்றும் தொடர்பாடல் ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்’ (15.1 சதவீதம்), ‘நிதிச் சேவை நடவடிக்கைகள்’ (9.9 சதவீதம்) போன்ற சில துறைகள் நேரான வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன.

2020 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலும் விரிவான விபரங்கள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். (www.statistics.gov.lk)

பி. எம். பி அனுர குமார

மேலதிக பணிப்பாளர் நாயகம்